# விண்ணொளி

CACM கொழும்புச்சபையின் சஞ்சிகை | 29.11.2020 | சபையார் மற்றும் நண்பர்களுக்கானது

## சபைப்போதகரின் செய்தி

### மாரநாதா!!!

**க**ர்த்தருக்குள் அன்பான சபையினர் யாவருக்கும் அட்வெந்து கால வாழ்த்துக்கள். நம்மைச்சுற்ற நடக்கும் சம்பவங்களால் மிகவும் சோர்வுற்றுக் காணப்படுகிறோமா? எப்போது விடிவு கிடைக்கும் என ஏங்கித் தவிக்கிறோமா? இவ்வாறான வேளைகளில தான் இறை வருகையின் உன்னதத்தை உவகையுடன் உண்மையாகவே உணர்ந்து கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை.

மாரநாதா! மாரநாதா!! மாரநாதா!!!

**மாரநாதா என்றால் இயேசு வருகிறார் என்று அர்த்தம்.**
கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து, பரமேறியபின் புதிய ஏற்பாட்டு சபை உருவானது. அப்போது சபை மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது மாரநாதா என்றார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை சீஷர்கள் காலத்திலேயே சபை மக்கள் எதிர்ப்பார்த்தார்கள். மேலும் ஒவ்வொரு நிமிடமும் அதற்கு தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள ஞாபகப்படுத்தும் பொருட்டு மாரநாதா என்று கூறிக்கொண்டார்கள்.

தூய பவுல் அடிகளார் "மாரநாதா" எனும் அரமேய பதத்தை 1 கொரிந்தியர் 16: 22ல் குறிப்பிடுகிறார். யூதனான பவுல் அரமேய மொழியில் மாரநாதா எனும் வார்த்தையை எழுதியது காரணமாகத்தான் என்பது திண்ணம். "ஆண்டவரே வருக" எனும் வார்த்தைக்கு இணையாக "ஆண்டவர் நம்முடன் இருக்கிறார்" என்றும் இருபொருள் பெறும் இந்த வார்த்தை ஆழ்ந்த அர்த்தம் நிறைந்தது. நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் நிறைக்கும் ஒரு வார்த்தை இந்த இடத்தில் பாவிக்கப்பட்டமை ஆழமானது.

திருவெளிப்பாடுகள் 22: 20ல் "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்". விரைவாக வரும் இயேசுவை எதிர்நோக்கியிருக்கும் ஒரு உறுதியை நாம் இப்பகுதியில் கண்டுகொள்ளலாம். யாக்கோபு எழுதிய திருமுகம் 5: 8ல் நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே என நாம் வாசிக்கிறோம்.

வருகை என்பது தூரமான எதிர்காலத்திற்கான ஒன்றல்ல, மாறாக அது நமது செயல்களின் தீர்ப்பை வழங்க நமது அருகிலேயே காத்திருக்கும் மனுக்குமாரனை தரிசிக்கும் உன்னதமான ஒரு தருணம் எனும் உண்மையை இப்பகுதி நமக்கு நன்கு விளக்குகிறது.

வருகையை எதிர்நோக்கி பலர் "காத்திருக்கும்" இந்நாட்களில், காத்திருத்தல் எனும் வார்த்தை நம்மைச் சோர்வுறச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. காத்திருப்பதை விட எதிர்நோக்கி இருப்பது மிகவும் நன்மை பயப்பதல்லவா? வருகையை எதிர்நோக்கியிருக்கும் திருச்சபையினருக்கு இந்த நாள் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது எனும் நற்செய்தி அறிவிக்கும் நாள் என உங்களுக்கு நான் உறுதிபட கூறுகிறேன்.

ஆகவே நாம் வெறுமனே காத்திருக்கவில்லை. எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டு, எம்மைத் திடப்படுத்திக் கொள்வோம். ஏனெனில் சர்வ வல்லமையுள்ள தேவன் எம்மோடு வாழ்ந்தார். எம்முள் உறைந்துள்ளார். எமக்காக வரவிருக்கிறார். **மாரநாதா!!!**

**- அருட்திரு A. B. தேவதாஸ், சபைப்போதகர்**

**ஆசிரியர் பக்கம்**

# வணக்கம்!

இந்த வருடத்தின் இரண்டாவது இதழாக இவ்விதழ் மலர்கிறது.

கொள்ளை நோயின் கொடுரத்தாக்குதல் நாட்டை மட்டுமல்ல உலகத்தையே உலுக்கி யிருக்கும் இவ்வேளையில் திருச்சபையாக நமது பொறுப்புகள் கடமைகள் என்பவற்றையிட்டு நாம் அதிகமாக சிந்திக்க அழைக்கப்படுகிறோம். ஆத்மீக ரீதியில் பொருளாதார ரீதியில் சமூகரீதியில் எதிர்பாராத வீழ்ச்சியை அனைத்துத் தரப்பினரிலும் நாம் அவதானிக்கமுடியும். மார்ச் மாதத்தின் பின்னர் ஆலய வழிபாட்டில் கலந்துகொள்ளாதவர்கள் பலர் இருக்கிறோம். இடையில் சுமார் மூன்று மாதங்கள் பல நிபந்தனைகளுக்குட்பட்ட வகையில் ஆராதனைகளை நடத்தினோம். பின்னர் மீண்டும் முன்னைய தடவையைவிட அதிகமான ஆபத்தான நிலையை எதிர்கொண்டுள்ளோம். எமது சக சபைமக்களின் ஆத்மீக நிலையையிட்டு எமது கரிசனை எவ்வாறுள்ளது? வாரத்தில் இரண்டு பேருடனாவது தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு சம்பாஷித்து அவர்களது தேவைகள், சுகநலன் களை விசாரிப்பதுடன் பரஸ்பரம் விசுவாச விடயங்களையும் பகிர்ந்துகொள்வது ஆத்மீக ரீதியில் அவர்களும் நாமும் கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளவும் ஜெப வாழ்க்கையில் ஊக்கமடையவும் உதவும்.

உண்மையில் இப்பண்பு கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் அவசியம் காணப்படவேண்டிய தொன்றாகும். ஆனால் நாம் இதனை இதுவரை கடைப்பிடிக்காதவர்களாக இருந்திரு க்கலாம். சக சபைமக்களுடன் சபை நிகழ்ச்சிகள் பற்றியும் நாட்டுநடப்புகள், வேலை, பொழுதுபோக்கு அம்சங்கள் பற்றியும் தாராளமாக உரையாடுவோம். ஆனால் விசுவாச விடயங்கள், கடவுளுடனான தொடர்பு போன்றவற்றைப் பேசுவதற்கு வெட்கப்படுவோம் அல்லது விரும்பமாட்டோம். ஆனால் இது சபைமக்கள் என்றவகையில் நமது பொறுப்பு என்பதுடன் ஆதித்திருச்சபையில் இப்பண்பு இருந்தது என்பதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும். இப்போதுள்ளது போன்ற காலங்கள் மற்றும் நிலைமைகள் நம்மில் அற்றுப் போயிருக்கக்கூடிய இந்தக் குணாதிசயங்களை நம்மில் மீள உண்டாக்க உதவுகின்றன.

கோவிட்19 காலமானது தனிப்பட்ட வாழ்க்கையில் நம்மில் பல நல்ல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. உணவை வீணாக்கக்கூடாது, பிரயாணங்களை முடிந்தளவு குறைத்துக்கொள்ள வேண்டும், சுகாதார முறைகளை நன்கு கடைப்பிடிக்க வேண்டும் (கைகால் கழுவியே வீட்டுக்குள் வருதல், சன நெரிசலான இடங்களுக்குச் சென்றால் குளித்துவிட்டே வீட்டுக்குள் வருதல், அணிந்த உடைகளை அன்றன்றே துவைத்தல் போன்றவை நம் முன்னோரின் வழமைகள்) ஆகிய விடயங்களை மகிழ்ச்சியுடன் மீண்டும் ஆரம்பித்திருக்கும் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நல்ல விடயங்களை ஆரம்பிக்க வேண்டும். ஊரடங்கு காலத்தில் ஒழுங்காகச் செய்த தின தியானத்தை இனி எப்பொழுதும் தொடரலாம். அதுபோன்றே சக சபைமக்களுடனான எமது உறவிலும் விசுவாச விடயங்க ளுக்கு முதலிடம் கொடுப்பதும் ஆவிக்குரிய வளர்ச்சியை ஏனைய சபைமக்களுடன் பரஸ்பரம் வளர்த்துக்கொள்ளவதையும் தொடரமுடியும்.

சக சபைமக்களது தேவைகளைக் கேட்டறிந்து எம்மால் இயன்ற உதவிகளை வழங்கலாம். குறிப்பாக சிலர் நவீன தகவல் தொழில்நுட்ப முறைகளுக்குப் பரிச்சயமற்றிருப்பர். அவர்கள் வெளியூரிலோ வெளிநாட்டிலோ இருக்கும் தம் உறவுகளுடன் தொடர்புகொள்ள தபால் முறையையே பயன்படுத்தி வந்திருப்பார்கள். இபபொழுது தபாற்சேவை ஸ்தம்பிதம் அடைந் துள்ள நிலையில் மின்னஞ்சல் மற்றும் கட்டணம் குறைவான தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள அவர்களுக்கு உதவமுடியும். அவற்றை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாம்.

இவ்வாறான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நமது சபைமக்கள் என்ற வட்டத்துக்குள் மட்டுப்படுத்த வேண்டும் என்றில்லை. அயலவர், சுற்றத்தினர் மற்றும் பலருக்கும் விஸ்தரித்துக் கொள்ளலாம்.

இவ்வருடத்தின் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியை கொண்டாட தயாராகிவரும் நாம், பொருளுதவியினால் மட்டுமல்ல, எம்மால் இயலுமான வகையில் தனிமையில் இருப்பவர்களை உற்சாகப்படுத்தி ஐக்கியத்தை வளர்க்கவேண்டும் என்பதை மறவாதிருப்போமாக.

**அனைவருக்கும் நத்தார் வாழ்த்துகள்.**

## திருமதி ரஞ்ஜனி ஜெயரட்ணம்

நமது சபையைச் சேர்ந்த விசுவாசமிக்க ஒரு அங்கத்தவரான திருமதி ரஞ்ஜனி ஜெயரட்ணம் அவர்கள் கடந்த 21.9.2020 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

விண்ணொளியின் கடந்த இதழை அவர் பாராட்டியது என் நினைவுக்கு வருகிறது திருச்சபையின் எல்லா நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் பண்புடையவராக அவர் விளங்கினார். அது மட்டுமல்ல, சிறு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருடனும் அளவளாவும் இயல்பு உடையவராகவும் மற்றவர்களின் தேவைகளில் கரிசனை கொண்டவராக தம்மால் இயன்ற உதவிகளை செய்வதிலும் ஆலோசனைகளை வழங்குவதிலும் அக்கறை கொண்டவராகவும் காணப்பட்டார்.

திருச்சபையின் காரியங்கள் ஒவ்வொன்றிலும் அக்கறையுள்ளவராக திருமதி ஜெயரட்ணம் இருந்தார். செபவாரத் தியானங்கள், பரிசுத்தவார தியானங்கள் போன்றவற்றில் கிரமமாக கலந்து கொள்வார். இவர் ஒரு சிறந்த ஜெப வீராங்கனை என்பதும் அவர் ஏழாலை கிராமத்தில் சமூகப்பணிகளிலும் அதிகமாக ஈடுபட்டவர் என்பதும் அன்னாருக்கான இரங்கலுரைகளில் குறிப்பிடப்பட்டது.

அன்னாரது கணவர் திரு. ஜீ. டீ. ஜெயரத்தினம் அவர்களும் ஒரு நல்ல சாட்சியாக வாழ்ந்தவர். அவர் கடந்த 2014இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

திருமதி ஜெயரத்தினம் அவர்களின் ஆத்துமா நீங்காத வெளிச்சத்தையும் நித்திய வாழ்வையும் பெற்று கர்த்தருக்குள் இளைப்பாறுதலடைய பிரார்த்திப்போம்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது பிள்ளகைளான ரஞ்ஜித்,சாம், ரூபன் மற்றும் உறவினர்களுக்கு வேண்டிய தேற்றரவைக் கொடுக்கும்படியும் ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

---

## திருமதி கத்தரீன் செல்வி துரைசாமி

முன்பு எமது ஐக்கியத்தில் இருந்தவரும் பின்னர் அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழ்ந்தவருமான திருமதி கத்தரீன் செல்வி துரைசாமி அவர்கள் கடந்த 29.10.2020 அன்று கர்த்தருக்குள் நிதிதரையடைந்தார். கொழும்பில் வாழ்ந்த காலத்தில் அன்னாரும் அவரது கணவர் காலஞ்சென்ற கோர்டன் துரைசாமி அவர்களும் மிகவும் உற்சாகமாக நமது நமது ஐக்கியத்தில் பங்கெடுத்தவராவர். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்காக னருக்காக ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

---

## திருமதி லீலா எமர்சன்

முன்பு எமது ஐக்கியத்தில் இருந்தவரும் பின்னர் கனடாவுக்கு புலம்பெயர்ந்து வாழ்ந்தவருமான திருமதி லீலா எமர்சன் கடந்த அக்டோபர் 15அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். கொழும்பில் வாழ்ந்த காலத்தில் அன்னாரும் அவரது கணவர் காலஞ்சென்ற ஸ்டான்லி எமர்சன் அவர்களும் மிகவும் உற்சாகமாக நமது நமது ஐக்கியத்தில் பங்கெடுத்தவராவர். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்காக ஜெபிக்கும்படி கேட்கப்படுகிறோம்.

---

## செய்திச் சரம்

*(நண்பர்கள் மற்றும் வெளிநாடுகளில் வதியும் சபைச் சொந்தங்களுக்காக)*

கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதிய வழிபாட்டின் பின்னர் கொவிட் 19 கொள்ளைநோய் காரணமாக நமது சபை வழிபாடுகள் இடைநிறுத்தப்பட்டன. ஆயினும் நமது சபைப்போதகரின் இடைவிடாத ஊக்கத்தாலும் உழைப்பாலும் சகல வழிபாடுகளும் வாட்ஸ் அப் மூலமாக சபைமக்களுடன் பகிரப்பட்டன. தொலை பேசி மூலம் சபையாருடன் உரையாடுதல், ஜெபித்தல் ஆகிய ஊழியங்களும் செய்யப்பட்டன.

ஜுன் மாதம் 12 ஆம் திகதியின் பின்னர் வழிபாடுகளை நடத்த அனுமதி கிடைத்ததால் சபைச்செயற்குழுவின் முடிவுக்கமைய ஜுன் 21முதல் ஞாயிறு வழிபாடுகள் காலை 7.30க்கும் 9.00 மணிக்குமாக இரு வழிபாடுகள் நடத்தப்பட்டன. ஒரு வழிபாட்டில் 50 பேர்வரை கலந்து கொள்ளும் அடிப்படையில்.
நிலைமைகள் சீரடைந்து சென்றமையால் செப்டெம்பர் 20 முதல் மீண்டும் ஒரே வழிபாடு காலை 7.30க்கு இடம்பெற்றது. ஆயினும் நாட்டில் நோய் பரம்பல் அதிகரித்ததால் அக்.11 முதல் மீண்டும் இரு வழிபாடுகளாக இடம்பெற்றன. அக்.25 இன் பின்னர் மீண்டும் வழிபாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

***முழு உலகின் சகல செயற்பாடுகளையுமே கேள்விக்குறியாக்கி இருக்கின்ற இந்த நோயைக்குறித்து நாம் கலக்கமடையாது இது விரைவில் கடந்து போக வேண்டுமென்று கடவுளை வேண்டுவோம்.***

**கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை – லூக்கா 1:37**

# *How to listen to a sermon.*

Do you find your mind wandering during the sermon? Here are some suggestions to help you concentrate on what God wants to say to you.

1. **Desire to hear.**

   As the preacher ascends the pulpit, pray like Samuel " speak Lord, for your servant hears". Be excited about what God is going to reveal to you that day.

2. **Pray for the Preacher.**

   Pray that the Holy Spirit will fill the Preacher and give him/her the strength and freedom to speak.

3. **Pray for yourself.**

   Pray that the Holy Spirit will open your ears and your hearts so that you will hear God's message that day. Pray also for the rest of the congregation that they too will hear the message.

4. **Read the Bible text.**

   Bring your Bible to Church and read the text as you prepare to hear the message.

5. **Take notes.**

   Along with your Bible bring a notebook so that you could take down notes and Bible quotations and references. This will help you to concentrate and also go over the message in the quietness of your home later on. You can also read the references at home.

6. **Listen with your whole self.**

   Do not let bodily discomfort or others distract you. Make yourself as comfortable as possible and then forget about yourself or those around you. Concentrate on what is spoken from the pulpit.

7. **Ask Questions.**

   Silently carry on a little internal dialog with yourself. Ask "are you sure"? ' Is that true?' Make notes to check on it later.

8. **Make a mental note of how you are going to act on what you hear now.**

   Ask yourself what you are going to do about it and how you are going to act on it.
   Do not merely listen to the Word, and so deceive yourselves. Do what it says. Anyone who listens to the Word but does not do what it says is like a man who looks at his face in a mirror and after looking at himself, goes away and immediately forgets what he looks like. **James 1: 22 -24.**

9. **Talk to the Preacher at the end of the service.**

   Do not just say for the sake of commenting – great sermon or I enjoyed the sermon. Highlight anything new you have learnt or whether God spoke to you in a special way.

10. **Read your notes at home.**

    Read the references and write in your journal what you have learnt that day. Share it with others who were not there or start a discussion with family members who were there. ***(Continue on page 5)***

***How to listen to a sermon*–*Continuation of page 4***

Very often people comment about Preachers. Some are popular while others are not given a chance. This is mainly due to the fact that we do not hear what they say.

For God to plant a seed, what type of soil are you carrying into the Church?. If it is hard due to prejudging the preacher, or full of thorns due to unforgiveness and crowding your mind with bitterness, anger, envy, evil thoughts, past actions of others, then what is sown is wasted.

Try these 10 suggestions and see how it transforms you worship every Sunday.

**Grace and Peace to you.**

**- Vasanthi Rajaratnam.**

---

# கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள்

கிறிஸ்து இயேசுவின் பிறப்பைத் தொடர்ந்து நடைபெற்ற காரியங்களை விளக்கும் மத்தேயு நற்செய்தியாளன், கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் பற்றி குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் பெத்லகேமுக்கு வந்து இயேசுவைப் பணிந்து கொண்டதையும் (மத்தேயு 2 :1- 11) தமது வானசாஸ்திர அவதானங்களால் வழிநடத்தப்பட்டதையும் காண்கிறோம். அவர்கள் கிழக்கிலிருந்து வந்ததாக வாசிக்கிறோம்.

இங்கே ஒன்றைக் கவனிக்கவேண்டும் - கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரியர் மூன்று வகைப் பரிசுகளைக் கொண்டு வந்தனரென்று வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதேயல்லாமல் மூன்று சாஸ்திரியர் வந்ததாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. மூன்று வகைப் பரிசுகளை இருவர் கொண்டு வந்திருக்கலாம். பத்துப்பேரும் கொண்டு வந்திருக்கலாம்.

எப்படியென்றாலும் இது எருசலேம் நகரமானது தூரதேசத்திலிருந்து வரும் சிறப்பு விருந்தினர்களை வரவேற்கும் முதல் நிகழ்வல்ல. சேபாவின் ராஜஸ்திரி சாலோமோன் அரசனிடம் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டதையும் பொன், கந்தவர்க்கங்கள் மற்றும் இரத்தினக்கற்கள் போன்ற உச்சிதங்களை அவனுக்குப் பரிசளித்ததையும் நாம் அறிவோம்.(1இராஜாக்கள் 10:1-10). அந்த ராஜஸ்திரியின் விஜயமானது மனுக்குல மீட்பராக வந்தவரும் வரலாற்றில் தாவீதின் மைந்தனென அறியப்பட்டவரும் யூதரின் ராஜா என விளிக்கப்பட்டவருமான (மத்தேயு 2:2) இயேசுகிறிஸ்துவைப் பணிந்துகொள்ள வந்த இந்த சாஸ்திரிகளின் விஜயத்தின் முன்னறிவிப்பே என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அந்த ராஜஸ்திரி சாலோமோனை பாராட்டிப் புகழ்ந்ததுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. உம்முடைய தேவனாகிய கர்த்தர் தோத்திரிக்கப்படுவாராக என்றாள்(1ராஜாக்கள் 10 : 9). அவள் கர்த்தரை அறிந்தவளாக அவரைப் போற்றுகிறாள். இங்கே இந்த சாஸ்திரிகளும் கிறிஸ்துவைத் தரிசித்தபின்னர், சொப்பனத்தில் பெற்றுக்கொண்ட கடவுளுடைய எச்சரிப்பை ஏற்றுக்கொண்டவர்களாக, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாக அரச கௌரவங்களைப் பெறுவதைத் தவிர்த்து வேறு வழியாய்த் தம் தேசத்துக்கு சென்றனர்.

இந்த ராஜஸ்திரியைப் பற்றி பின்னாளில் இயேசு கிறிஸ்து கூறும்போது அவள் பூமியின் எல்லைகளிலிருந்து வந்ததாகக் குறிப்பிடுவதுடன், சாலோமோனின் ஞானத்தைக் கேட்க அவள் வந்தாள் எனவும் நியாயத்தீர்ப்பு நாளிலே அவள் எழுந்து நின்று கிறிஸ்துவை நிராகரிப்போர் மேல் குற்றம் சுமத்துவாள் என்றும் கூறுவதை நாம் வாசித்திருக்கிறோம் (மத்தேயு 12:42).

இஸ்ரவேல் மக்கள் கூட தமது நீண்டகால எதிர்பார்ப்பான மேசியாவை விசுவாசிக்காத போதும் வேற்றுத் தேசமக்கள் அவரை அங்கீகரித்தனர். விசுவாசித்தனர்.

இயேசு பாலகனைப் பணிந்துகொள்ள வந்த சாஸ்திரிகளின் சம்பவமானது நம் முன் வைக்கும் ஒரே கேள்வி:

**கிறிஸ்துவின் பிறப்பையும் வாழ்வையும் நாம் எவ்வாறு பிரதிபலிக்கப்போகிறோம்?**

(PNJ)

# Emotionally touching personal experiences

By Isaac T. Kulendran

isaackulendran@gmail.com

'Unforgettable-that's what you are' sang Nat King Cole. Certain emotionally touching experiences get etched in our memories for a long time and keep surfacing every now and then. (There is a moral in the second and third episodes for the readers to read between the lines.)

One such experience was concerning my daughter. During our first year of marriage, we had a baby, but unfortunately it was stillborn. While we were mourning the loss of the baby, we had to hear all types of offending jokes from people who didn't know that we already had a baby. It gave pleasure to the narrator but hurt us and humiliated us deeply. After an agonizing experience of 3 years my daughter was born, silencing all wagging tongues and critics. Naturally, it was enthralling for us to see the baby growing up and everything she did was precious.

One such thing she did, when she was hardly a year old was to get down from bed on her own without my help and walk up to me in the kitchen where I was scraping coconut, and standing behind me spoke her very first full sentence 'Appa(father), how dee do?' I turned around and I felt as if heaven had fallen on me! It was the most wonderful words I had heard from my precious baby, who silenced all critics when she was born. I still keep recalling it and sometimes tell her too.

***

When I was teaching in a foreign country, it was my unfortunate experience that I had to work under a duffer of a principal, who would believe anything he was told. I used to tell my friends that if somebody told him anything about me, he would straightaway believe it, not considering other possibilities! Due to many reasons, many teachers were jealous of me and would report each and every trivial matter about me and in the end I got scolded mercilessly by the principal, all of which I took up turning the other cheek: I never did tit-for-tat with anybody-that was my lifestyle. The teachers concerned were bent on currying favour with the principal and damaging my career. It was usual for the principal to plant a spy just outside the classroom and his duty was to report what he saw and did not see.

On one such occasion, I was explaining a passage to the girls in class when suddenly I noticed a spy, standing outside the classroom, and observing me. At once, my facial expression changed and I felt utterly distressed and humiliated that I was being observed. The girls were extremely sensitive to my needs. They gave a quick signal to each other and all of them in unison sang "Sir, Sir we love you" and they went on singing. It was a line from a Hindi song. When I heard them sing with so much loyalty and support for me, my facial expression changed from discomfiture to calm composure. The spy probably expected me to react unfavorably but my lifestyle was to turn the other cheek-this way I have silenced the worst of people.

*(Continue on page 7)*

*Emotionally touching personal experiences–Continuation of page 6*

My turning the other cheek made the spy leave unnoticed .I carried on with my lesson with renewed vigor, because of the backing I received from the girls. This was in all my thirty-five years as a teacher, the most wonderful moment in my career. The rallying around of the girls was most unexpected and their loyalty a stimulant. Later I realized that it must have been a deliberate act of mischief on the part of the spy, because the principal didn’t call me to scold me.

It is said in the Bible ‘Your wickedness will reach your head’ (Psalms 7:17). His wickedness did reach his head. Before the end of the year he was involved in a serious act of errant conduct and the principal discontinued his not so valuable services. He had to pack up and go to his country (not Sri Lanka). No one was there at the airport to sing ‘Sir, sir we love you’! These things happened to me even after I had produced the best O’ level results in English Language in the history of the school.

This problem I faced may appear simple to the readers, but one must remember that I was in a foreign land, with only my wife to back me and the Lord was my refuge and strength. With that I managed and still do the same!

***

On my return to my country I used to go for my constitutional walks in the evenings. I was going down a lonely lane, when I was compelled to ease myself, being a diabetic. As I was relieving myself, a three-wheeler sped past behind me. It was twilight time so it was all right. But suddenly the vehicle swerved, after going about 20 yards, flashing its lights on me. I quickly did an about turn and lost my balance when doing so and fell against the barbed wire fence. But thank God, I had the presence of mind to cover my head with both hands. So my hands were scraped by the barbed wire and nothing happened to my head. As I lay on the ground completely inert, many cars went past me but no one stopped to help me get up, probably because I wore a sarong and not trousers. Finally, God sent somebody to look after me – not a man but a cow on the other side of the barbed wire fence.

The cow was no stranger to me. I used to feed him with all my excess papaws and bananas. Sometimes he would come running to me from the other side of the compound on seeing me. Unlike human beings who got my help and showed only ingratitude, this cow remembered my good deeds and waiting on the side of the barbed wire fence, looking at me with sad eyes, which seemed to be popping out, he seemed to ask me ‘What happened to you, my darling?’ I was so emotionally touched by her mournful looks. It gave me courage to get up on my own. It really was a touching experience - only the cow and I knew about it.

---

## அடுத்த இதழ்

விண்ணொளியின் அடுத்த இதழ் எதிர்வரும் உயிர்த்தெழுந்த ஞாயிறன்று வெளிவரவிருக்கிறது. சபைமக்கள் மட்டுமல்ல நண்பர்கள் அபிமானிகள் கூட ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

\- *ஆசிரியர்*

---

# நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் காத்திருப்போம்.

ஒரு விமானநிலையத்தில் காத்திருக்கும்போது விமானம் வர தாமதமாகும் என அறிவிக்கப் பட்டால் அல்லது ஒரு பிரமுகரைச் சந்திக்க காத்திருக்கும்போது அவர் வருவதற்கு தாமதமாகும் எனக் கூறப்பட்டால் நாம் மிகவும் அசௌகரியமடைவதுடன் பொறுமை இழந்தும் காணப்படுவோம். இப்பொழுது முழு உலகமுமே அவ்வாறான ஒரு நிலையில் தான் உள்ளது. கொரோனா கொள்ளை நோயின் தாக்கமானது உலகையே முடக்கிவிட்ட நிலை. பலர் தொழிலை இழந்துள்ளனர். மருத்துவ சிகிச்சைகள், அத்தியாவசிய கொள்வனவுகள் கொடுப்பனவுகள் கட்டுமான வேலைகள் திருமணங்கள் போன்ற பல காரியங்களை மக்கள் பின்போடும் நிலையை எதிர்கொண்டு ள்ளனர். வெளிநாடுகளுக்குச் சென்ற பலர் நாடு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர். இத்தகைய நிலைமையின் காரணமாக பலர் அமைதி இழந்தவர்களாகவும் நிம்மதியற்ற வர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த நிலை எப்போது மாறும், எப்போது சகஜநிலை திரும்பும் என்ற ஏக்கம் அனைவரிடமும் காணப்படுகிறது. கடவுளே நம் ஒரே நம்பிக்கை, அவராலேதான் இந்த முடக்க நிலை நீங்கி நாம் வழமைக்குத் திரும்பலாம் என்ற நிலைப்பாடு இப்பொழுது அனைவரிடமும் காணப்படுகிறது. கடவுளை மறந்து வாழ்ந்தவர்கள் இப்பொழுது அவரைத் தேட ஆரம்பித்துள்ளார்கள்.

***'நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்' (சங்கீதம் 119: 71)***

என்பது போன்ற பல வசனங்களை நாம் திருமறையில் வாசிக்கிறோம். இவ்விதமாக கடவுளைப்பற்றி அதிகமாக உணர்வடைந்து அவரது பிரசன்னத்தை நாடுபவர்களாக நாம் வாழும்போது இவ்வாறான முடக்க நிலைகள் மாறவேண்டும் என்பது குறித்த நமது காத்தி ருப்புகளும் அர்த்தமுள்ளதாக அமையவேண் டும். எரேமியாவின் புலம்பல் புத்தகத்தில் ஒரு வசனம் காணப்படுகிறது.

*'தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது.'(புலம்பல் 3: 25,26)*

நம்மை இரட்சிக்கும் தேவனானவர் நம்மில் அதீத கரிசனை உள்ளவர். எமது நிலைபரங்களை முழுதுமாக அறிந்தவர். எமது தேவைகளை எம்மைவிட அதிகமாக உணர்பவர். ஆக, இவ்வாறான முடக்க நிலைகள், காரியங்களி லுள்ள தாமதங்கள், எமது தேவை கடமைகள் பற்றிய எமது கவலைகள் எல்லாவற்றையும் அறிந்த ஆண்டவரில் நாம் பூரணமான நம்பிக்கையை வைத்து அவரிடம் எமது துயரங்கள் பாரங்கள் தேவைகள் அனைத்தையும் ஒப்படைக்கும் போது அவர் தமது நேரத்தில் எமது காரியங்களை வாய்க்கப்பண்ணுவார். ஆகவே நாம் நம்பிக்கையோடு கர்த்தருக்குக் காத்திருக்கவேண்டும்.

சிலர் காத்திருப்பார்கள். ஆனால் பதட்டத்துடன், எரிச்சலுடன், அங்கலாய்ப்புடன், அவிசுவாசத்துட ன். ஆனால் நம்பிக்கையுடன் காத்திருப்பவர்களா னால் எப்படி இருக்கவேண்டும்? மகிழ்ச்சியுடன்!

***'கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்.'(சங் 37:4)***

அன்னாள் தனது மனக்கிலேசத்தையிட்டுக் கர்த்தருடைய சந்நிதியில் தனது இருதயத்தை ஊற்றி செபித்தபின்பு, ஆசாரியனின் ஆசீர்வாதமும் கிடைக்கப்பெற்றபின் அப்புறம் அவள் துக்கமுகமாய் இருக்கவில்லை என்று வாசிக்கிறோம். கடவுளிடம் எமது குறைவு களையும் கவலைகளையும் குறித்து ஒப்படைத்து செபித்தபின்பு அவர் அதனைத் தமது மேலான சித்தத்துக்கேற்ப நிறை வேற்றுவார் என்ற விசுவாசத்துடன் இருப்போமானால் நாம் துக்கம், பதட்டம், அவிசுவாசத்துடன் இருப்பதை விடுத்து மனமகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும். நமது நாட்டில் மூன்றாவது நிலைக்குள் பிரவேசித்தி ருக்கும் இந்த கோவிட்19 காலகட்டத்தில் மட்டுமல்ல நம் வாழ்வின் எந்தக்கட்டத்திலும் இந்த விசுவாசமும் கர்த்தருக்கு நம்பிக்கை யோடே மகிழ்ச்சியாகக் காத்திருப்பதே மேலானது என்ற உண்மையை நாம் எமதாக்கிக்கொள்ள வேண்டும்.

நம்புகிறவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதுடன் ஆண்டவருக்கு நன்றி சொல்வார்கள். 'ஆண்டவரே நீர் எமது நிலைமையை அறிந்திருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். உம்முடைய வாக்குத்தத்தங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம். நீர் செய்துமுடிக்கப் போகிற நன்மைக்காய் உமக்கு நன்றி அப்பா' என்று கூறி அவருக்குள் சந்தோஷமாக நாம் இருக்கவேண்டும்.

**உன் நம்பிக்கை வீண்போகாது.**
**- நீதிமொழிகள் 23 : 18.**

*-(PNJ)*

***<u>இணையத்தில் இதயம் கவர்ந்தது</u>***

## *மன அழுத்தத்தைத் தவிர்ப்போம்*

*கடைசி நிமிடப் பரபரப்பைத் தவிருங்கள். எங்காவது செல்லவேண்டுமெனில் அரை மணித்தியாலம் முன்பதாகவே புறப்படுவது, காலையில் நேரத்தோடு எழும்பிவிடுவது, பயணத்திற்குத் தேவையானவற்றை முதல் நாள் இரவே எடுத்து வைத்துக்கொள்வது போன்ற பழக்கங்களை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

*ஒரு நேரத்தில் ஒரு வேலையை மட்டுமே செய்யுங்கள். எட்டு வேலைகளையிட்டு சிந்தித்துக்கொண்டு ஒன்பதாவது வேலையைச் செய்தால் மன அழுத்தம் அதிகரிக்கும். செய்ய வேண்டிய வேலை கள் எவையெனக் குறித்துக்கொள்ளுங்கள். அதிக முக்கியமான அல்லது அவசியமான வேலைகளை முதலில் செய்யுங்கள். எல்லா வேலைகளையும் உடனேயே செய்துவிடவேண்டும் என்று கட்டாயம் இல்லை. போதுமான ஓய்வு உங்கள் நிகழ்ச்சி நிரலில் அவசியமானது.

* உங்களுக்கு மன அழுத்தம் தரக்கூடிய விடயங்களை தவிருங்கள். இரைச்சல், வெளிச்சம், தாமதம், சிலவகை வாசனை, சில நபர்கள்... இந்தப் பட்டியல் எவ்வளவு நீண்டதாகவேனும் இருக்கலாம். முடிந்தளவு தவிருங்கள். முடியாதவிடத்து நீங்கள் விலகிப்போய்விடுங்கள்.

* உடற்பயிற்சி செய்யுங்கள். ஆரோக்கிய மான உடல், மன அழுத்தத்தின் எதிரி. உடலில் இரத்த ஓட்டமும் ஆக்சிஜின் விநியோகமும் சீராக இருக்கும்போது மன அழுத்தம் உண்டாகக்கூடிய வாய்ப்பு மிகவும் குறைவு. மூச்சுப் பயிற்சி, நடைப் பயிற்சி, ஜாக்கிங் போன்றவற்றை உங்கள் தினசரி அட்டவணையில் சேருங்கள்.

*தீய பழக்கங்களை விட்டு விடுங்கள். புகையிலை, மது, போதை முதலியவை மன அழுத்தத்தை அதிகரிக்கும்.

*எதிர்பார்ப்புகளைக் குறைத்துக்கொள்ளவும் 'போதும் என்ற மனதுடன் கூடிய தேவபக்தி யே மிகுந்த ஆதாயம்' என வேதாகமத்தில் காண்கிறோம். (1தீமோத்தேயு 6 : 10). குழந்தைகளுக்கு மன அழுத்தம் வருவதில்லை. காரணம் அவர்களுக்கு எதிர்பார்ப்புகள் இல்லை.

*நேர்மறையான சிந்தனைகளைக் கொண்டவராக இருங்கள். நடந்து முடிந்த நிகழ்வுகளின் மோசமான பக்கங்களை நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம்.

*சின்னச்சின்ன வெற்றிகளையும் கொண்டாடுங்கள். சிறிய வெற்றிகளின் கூட்டுத்தொகையே பெரிய வெற்றியாகிறது என்னதை மறவாதீர்கள்.

*மற்றவர்களுடன் உங்களை ஒப்பிடாதீர்கள். அது தேவையற்ற மன அழுத்தத்தையும் கவலையையும் ஏற்படுத்தும்.

---

## *பாவத்தை வெறுத்து பாவிகளை மன்னிக்கும் இயேசு*

சமீபத்தில் மத்தேயு நற்செய்தி 21ஆம் அதிகாரத்தின் 23 முதல் 32 வரையான வசனங்களில் காணப்படும் பகுதியை குறிப்பிட்டு ஒரு அன்பர் ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார். (தயவுசெய்து இப்பகுதியை ஞாபகப்படுத்திக்கொண்டு அல்லது ஒரு தடவை வாசித்துவிட்டு இக்கட்டுரையைத் தொடரவும்) 'வரிதண்டுவோர், விலைமகளிர்' ஆகியோரைப்பற்றி இயேசு கிறிஸ்துவும் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றாரே, அப்படியென்றால் அவரும் பாவிகளைச் சுட்டிக்காட்டி பேசுகிறாரா எனக் கேட்டார். உடனே எனக்கு, பல வருடங்களுக்கு முன்னர் நான் வாலிபனாக இருந்த காலத்தில் ஒரு விவாத அரங்கில் ஒரு அன்பர் கேட்ட கேள்வி ஞாபகத்திற்கு வந்தது. விலைமகளிரை மட்டும் குறிப்பி டும் இயேசுகிறிஸ்து ஏன் அவர்களது வாடிக்கையாளர்கள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை? அவர்கள் பாவிகள் இல்லையா? என்ற கேள்வியை அவர் கேட்டார்.

அனைவரையும் பாவத்திலிருந்து இரட்சிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இயேசு இப்பூவுலகிற்கு வந்தார்.

இயேசுகிறிஸ்து எந்தவிதமான பாவத்துக்கு உட்பட்ட எவரையும் அவரது பாவத்தைத் சுட்டிக்காட்டி ஒதுக்கியவரல்ல. அவர் பாவிகளை நேசித்தவர். பாவ இயல்பை கொண்ட மனுக்குலத்தின் மீது இரக்கம் கொண்டு அவர்களை மீட்டு கடவுளுக்கு ஏற்புடையோராக்க விரும்பி மனிதராக வந்தவர். என்ன பாவத்தை செய்தார் என பிரசித்தப்படுத்தாமலே *'இனிப் பாவம் செய்யாதே'* என்றும், *'அதிக கேடானது ஒன்றும் உனக்கு நேரிடாதபடி இனிப் பாவம் செய்யாதே'* என்றும் அவர் கூறியதை வாசித்திருக்கிறோம்.

***(தொடர்ச்சி 10 ஆம் பக்கத்தில்)***

பாவத்தை வெறுத்து...– 9ஆம் பக்கத் தொடர்ச்சி

கல்லெறியப்படும்படி பரிசேயரால் இயேசுவிடம் அழைத்து வரப்பட்ட பெண்ணின் விடயத்தில் இயேசு அவளைக் கொண்டு வந்தவர்களின் பாவத்தையும் குறிப்பால் உணர்த்தியதை கண்டோம்.

வரிதண்டுவோருடனும் பாவிகளுடனும் அவர் உணவருந்தினார்.(மத்தேயு 9 :10). வரிதண்டுபவனாக இருந்த மத்தேயுவைத் தமது சீடனாக்கினார். வரிதண்டுவோரின் தலைவனாக இருந்த சகேயுவின் வீட்டில் தங்கினார். பாவி என எல்லோராலும் ஒதுக்கப்பட்டவளிடம் அவர் இறையரசின் காரியங்களை கூறியதுடன் தாமே மெசியா என்பதையும் அவளிடம் கூறினார்.(யோவான் 4: 21 -26)

மத்தேயு நற்செய்தியில் காணப்படுகின்ற இந்த சம்பவத்தில்(மத்தேயு 21: 22-32) அவர் பரிசேயருடன் உரையாடிக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய வழிக்குச் சென்றே – அவர்களுடைய கூற்றுகளின் அடிப்படையிலேயே அவர்களின் தவறான போக்கைச் சுட்டிக்காட்டி அவர்களைத் திருத்தவே அவர் எத்தனிக்கிறார். பரிசேயர்கள் வரிதண்டுவோர் மேலும் விலைமகளிர் மேலும் அதிக வெறுப்பை காட்டி வந்தார்கள். அது மாத்திரமல்லாது வரிதண்டுவோர் மற்றும் விலைமகளிர் தான் பாவிகள் எனும் விதமாக பேசிவந்தவர்கள்.

ஆகவே **பரிசேயர்களின் கண்ணோட்டத்தில் கடவுளுடைய அரசுக்குத் தகுதியற்றவராக் காணப்படுபவர்கள் மனந்திரும்புதல் மூலம் இரட்சிக்கப்படுவார்கள்** என்பதைக் குறிப்பிடுவதற்காகவே இயேசு இவ்வாறு கூறினார்.

இயேசு கிறிஸ்து குறிப்பிட்டு வெறுத்த ஒரே சாரார் மாய்மாலக்காரர் மட்டுமே. அவர்களும் தங்கள் மாய்மாலத்தை விட்டு மனந் திரும்பி கடவுளின் அரசுக்கு உகந்தோராக வேண்டுமென்பதையே அவர் விரும்பினார்.

*- (PNJ)*


**English Lessons**
by experienced Teacher.

Contact
**I. T. Kulendran**
on
**2739441**


# சபையாரின் கவனத்திற்கு

## வழிபாடுகள்

* நமது சபை வழிபாடுகள் நடத்தப்படுவதற்கு சாத்தியமான நிலைமை காணப்படும் போது விபரங்களை சபைப்போதகர் உடனுக்குடன் சபை மக்களுக்கு அறியத்தருவார்.

## விண்ணொளியில் உங்கள் விளம்பரங்கள்

* சபையார் கல்வி, இசைப்பயிற்சி, வீட்டுத்தோட்டம், சமையற்கலை, தையற் கலை, புத்தகங்கள் தொடர்பான தமது அறிவித்தல்களை விண்ணொளி இதழ் மூலம் வெளியிட விரும்பினால் அதனைப் பிரசுரிக்க 'விண்ணொளி' இடமளிக்கும். இருபத்தைந்து சொற்கள் கொண்ட வரிவிளம்பரத்துக்கு அன்பளிப்பாக 500/- ரூபா வழங்கவேண்டும். ஆசிரியரிடமோ போதகரிடமோ விபரத்தைக் கொடுத்துவிட்டு பொருளாளரிடம் அல்லது உதவிப் பொருளாளரிடம் அன்பளிப்பைக்கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவேண்டும். பிரசுரிக்கப்படவேண்டிய விபரம் பற்றிய இறுதி தீர்மானம் சபைப் போதகருக்குரியது.

---

* *Sow a thought, reap an act;*
*Sow an act, reap a habit;*
*Sow a habit, reap a character*
*Sow a character, reap a destiny.*

* *New mercies every morning,*
*Grace for every day,*
*New hope for every trial,*
*And courage all the way.*

* *Praise to God come naturally when you count your blessings*

* *God can turn obstacles into opportunities of Grace.*

---

போக்குவரத்தில் மட்டுப்படுத்தல் பேணப்பட வேண்டிய நிலை காரணமாக இவ்விதழில் புகைப்படங்களைச் சேர்க்க முடியாமையை தெரிவித்துக்கொள்கிறோம். – ஆசிரியர்.

## *RESIGNATION OF A LITTLE BIRD*

This poem shows how a little bird feels in a cage but says it sings all day long. Also that God who put it in that cage hears its songs.

During these covid lockdowns, we also feel the same and some of us just rest and sing lyrics and hymns and know that the Lord who is keeping us safe is also hearing our songs and ministering to us.

In this new experience, we realize what is essential, what is unnecessary, what is precious which we took for granted and what the Lord wants us to realize so that our lives may reflect His love. May this poem speak to our hearts so that we will find rest in this situation instead of being afraid and frustrated about the future. God will take care of us.

-Vasanthi Rajaratnam

## RESIGNATION OF A LITTLE BIRD

A little bird I am
Shut from the fields of air
And in my cage I sit and sing
To Him who placed me there
Well pleased a prisoner to be
Because my God it pleases Thee.

Naught have I else to do
I sing the whole day long
And He whom most I love to please
Doth listen to my song:
He caught and bound my wandering wing
But still He bends to hear me sing.

Thou hast an ear to hear
A heart to love and bless
And though my notes were e'er rude
Thou wouldst not hear the less
Because Thou knowest as they fall
That love, sweet love inspires them all.

My cage confines me round,
Abroad I cannot fly,
And though my wing is closely bound,
My heart's at liberty.
My prison walls cannot control
The flight, the freedom of the soul.

O, it is good to soar
These bolts and bars above,
To Him whose purpose I adore,
Whose providence I love;
And in Thy mighty will to find
The joy, the freedom, of the mind.

*- By Jeanne Marie Guyon 1648-1717*

---

# ஆராதிக்க வந்தோம் - மூன்று ஆண்டுகள் நிறைவு செய்தோம்.

வருகையின் காலமானது கிறிஸ்து பிறப்பை நினைவுகூரவும் இரண்டாம் வருகையின் தாற்பரியங்களை உணர்ந்து நம்மைத் தயார்ப்படுத்தவும் ஏவுகின்ற காலமாக உள்ளது. அத்துடன் கிறிஸ்தவ ஆண்டானது வருகையின் முதலாம் ஞாயிறுடனேயே ஆரம்பமாகிறது.

*நமது CACM கொழும்புச்சபையைப் பொறுத்தவரையில் வருகையின் முதலாம் ஞாயிறானது நமது வழிபாட்டு மையத்தின் ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட நாளாகவும் அமையவிருக்கிறது. கொழும்புச்சபையார் தமக்குக் கடவுளின் கிறிஸ்மஸ் பரிசாக கிடைத்த இந்த சிலாக்கியத்துக்காக ஆண்டுதோறும் அவருக்கு நன்றி செலுத்தலாம்.* - 2018ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி நமது ஆலயத்தின் முதலாவது ஆண்டு நிறைவு ஸ்தோத்திர வழிபாட்டில் கலந்துகொண்டு அருளுரையாற்றிய CACM இன் ஓய்வுநிலை தலைவர் அருட்திரு அன்னப்பா ஜெயக்குமாரன் முன்வைத்த கருத்து இது.

இவ்விடத்தில் நாம் கடவுளை வழிபடத்துவங்கிய மூன்றாவது ஆண்டை நிறைவு செய்கிறோம். பத்து வருடங்களாக பல நிலைமைகளுக்கூடாக நம்மோடு பயணித்து நம்மை வழிநடத்தி இவ்விடத்தில் நம்மைச் சேர்த்த நமதாண்டவரின் எல்லையில்லாக் கிருபை வரங்களையிட்டு அவருக்கே சகல கனமும் மகிமையும் செலுத்துவதுடன் அவர் நமக்களித்திருக்கும் பொறுப்புகளையிட்டும் உண்மையாயிருக்க அழைக்கப்படுகிறோம்.

சபைமக்களாகிய நமது ஒற்றுமை, சபை வாழ்வில் நாம் காட்டும் கரிசனை, கிறிஸ்து ஸ்தாபித்த திருச்சபையின் விழுமியங்களை உணர்ந்து உண்மையோடு அவற்றுக்காக நம் தாலந்துகளை அர்ப்பணிக்கவேண்டிய பொறுப்பு ஆகியவற்றை நாம் ஒருகணம் திரும்பவும் நினைத்துப் பார்க்கவும், எம்மில் திருத்திக்கொள்ளவேண்டிய காரியங்களைச் சரிசெய்யவும், இவ்விடயங்கள் தொடர்பான எமது சங்கற்பங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும் இந்த வருகையின் காலம் /ஆண்டுநிறைவு இரட்டிப்புச் சந்தர்ப்பத்தை ஆண்டுதோறும் நமக்குத் தருகின்றன.

மனுக்குலத்திற்குக் கடவுளின் அதியுயர் ஈவாகிய கிறிஸ்துவின் பிறப்பைக்கொண்டாடும் இவ் வருகையின் ஞாயிறில் நமது வழிபாட்டு மையத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவையிட்டும் கடவுளை நன்றியறிதலோடு துதிப்போமாக. (ஆசிரியர்)

---

# *Christmas gift* - ideas and suggestions:

To your enemy, *forgiveness.*
To an opponent, *tolerance.*
To a friend, *your heart.*
To a customer, *service.*
To all, *charity.*
To every child, *a good example.*
To yourself, *respect.*

---

*May the Blessings of Christmas bring you Peace and Joy throughout the New Year*

---